# இலங்கையிற் கிடைத்த பார்வதி வெண்கலச் சிலைகள்

பேராசிரியர் செல்லையா கிருஷ்ணராசா

## ஆய்வுச் சுருக்கம்

*இலங்கையின் வெண்கலப்படிமக்கலை வரலாற்றில் மத்திய காலமான பொலன்னறுவைக்காலம் மிகவும் தனித்துவமான பங்களிப்பினை வழங்கியிருப்பதனைக் காண்கின்றோம். பௌத்த–இந்து வெண்கலப்படிமங்கள் அதிக எண்ணிக்கையில் உருவாக்கப்பட்ட காலம் இக்காலமாகும். இலங்கையின் சுதேச மரபுகளும், விதேச மரபுகளான தென்னிந்தியக்கலைமரபுகளும் கலந்த வகையில் பஞ்சலோக கலை மரபுகளும், கற்சிற்பக்கலை மரபுகளும் பொலன்னறுவைக்காலக் கலைக்கூடங்களை அணி செய்த கலை வரலாற்றை சிவன், நடராசர், விஷ்ணு மற்றும் பார்வதி வெண்கலப்படிமங்களிலிருந்து கண்டு கொள்ளலாம். இவ்வாய்வுக்கட்டுரையின்கண் பொலன்னறுவையில் இருந்து கிடைத்த பார்வதி வெண்கலப்படிமங்கள் பற்றி ஆராயப்படுகிறது.*

தென்னாசியாவிலும் ஆங்கிலேயர்களது வருகையைத் தொடர்ந்தே அப்பிராந்தியப் பண்பாட்டு ஆய்வுகள் ஆரம்பித்து வைக்கப் பட்டன. இதன் பயனாக காலவெள்ளத்தினால் அள்ளுண்டு சிதையுண்டு, அழிபாடுகளுக் குள்ளும், மண்மேடுகளுக்குள்ளும் மறைக்கப் பட்ட, மறைந்துபோன, கலைவனப்பு மிக்க கருவூலங்கள் வெளிக்கொணரப்பட்டன. தென்னாசியாவைப் பொறுத்தமட்டிலே பௌத்த – இந்து, சமண பண்பாட்டுக் கருவூலங்களின் வெளிப்பாடானது அப்பிரதேசத்தின் பண்பாட்டு வரலாற்றினை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு உதவுவதாக அமைந்தது.

இந்திய உபகண்டத்திலும் சரி, இத்தீவிலும் சரி ஆங்கிலேயர்களால் தொடக்கிவிடப்பட்ட பண்பாட்டு ஆய்வுகள் இன்றைய நிலையில் புத்தூக்கம் எய்தி, பண்பாட்டு வரலாற்றுக் கட்டுமானத்திற்கு மேன்மேலும் பல புதிய தகவல்களை வழங்கும் நிலையை அடைந்துள்ளது. இலங்கையைப் பொறுத்தமட்டிலே பௌத்தமதம் தொடர்பான பண்பாட்டியல் ஆய்வுகள் பெருவளர்ச்சி கண்டபோதும், இந்துப் பண்பாட்டியல் ஆய்வுகள் பெருமளவிற்குப் பின்தங்கிய நிலையிலே இருந்து கொண்டிருப்பதனைக் காணலாம். இருந்த போதிலும் பௌத்த பண்பாட்டியல் ஆய்வுகளின்போது வெளிப்படுத்தப்பட்ட இந்து மதம் தொடர்பான கருவூலங்களையும், தற்செயலாக நாட்டின் சில பாகங்களில் கிடைத்த இந்து மதம் தொடர்பான ஆவணங்கள், கலாசார எச்சங்கள் என்பவற்றையும் அடிப்படையாகக் கொண்டே எமது வரலாற்றாசிரியர்களும், இந்து மதத்தின் மீதான பற்று மிகுந்தவர்களும் அம்மதம் தொடர்பாக தத்தமது ஆய்வுகளை நடாத்தி வருகின்றனர். இந்நிலையில் ஓர் உண்மையை நாம் அனைவரும் புரிந்து கொள்ள வேண்டிய நிலையில் உள்ளோம்; அஃதாவது இலங்கையில் பௌத்தத்தின் வலயத்திற்குள்ளேயே இந்துமதம் தொடர்பான அனைத்து வரலாற்றுக் கருவூலங்களும் பாதுகாக்கப்பட்ட நிலையில் வெளிப்படுத்தப்பட்டு வருவதாகும்.[1]

இவ்வடிப்படையிலேயே இந்து மதம் தொடர்பாக இதுவரை கிடைத்த மூலாதாரங் களையும், கருவூலங்களையும் அடிப்படையாகக் கொண்டு அம்மதத்தின் முக்கியமான ஒரு

பிரிவாக உள்ள சைவமதத்துடன் இணைந்த பார்வதி வெண்கலச் சிற்பங்கள் பற்றி மேற்கொள்ளப்படும் இவ்வாய்வானது வரலாற்று மாணவர்களுக்கன்றி, இந்து நாகரிகத்துறை மாணவர்களுக்கும் பெரும்பயன் கொடுப்பதாக அமையும். இச்சிறு ஆய்வின் கண் இதுவரையில் இலங்கையில் பொலநறுவை யிலிருந்து வெளிக் கொணரப்பட்ட பார்வதி வெண்கல விக்கிரஹங்கள் தொடர்பாகச் சில விபரணங்களைக் கொடுப்பதே நோக்கமாக அமைகின்றது.

**வெண்கலச்சிலைகள் கிடைத்த இடங் களும்,அவற்றின் வரலாற்று முக்கியத்து வமும்.**

இலங்கையில் கடந்த நூற்றாண்டின் இறுதியில் தொடக்கி வைக்கப்பட்ட அகழ்வாய்வுகளினதும் (Excavations) மேலாய்வு களினதும் (Explorations) விளைவாகவும், தற்செயல் கண்டுபிடிப்புக்கள் காரணமாகவும் நாட்டின் பல பாகங்களிலிருந்தும் இந்து சமயம் தொடர்பாக, குறிப்பாகச் சைவமதத்துடன் தொடர்பான வரலாற்றுக் கருவூலங்கள் கிடைத்த வண்ணமுள்ளன[2]. இவற்றுள் எண்ணிக் கையிலே அதிகமாகக் கிடைத்த வண்ணம் இருப்பவை பார்வதியின் வெண்கலச் சிற்பங்களாகும். ஏறத்தாழ 20 க்கும் மேற்பட்ட இவ்வெண்கலச் சிற்பங்கள் நாட்டின் பல பாகங்களிலிருந்தும் இதுவரையிற் கிடைத் துள்ளன என்பது இச்சிற்பக்கலை தொடர்பாக ஆய்வு செய்வோருக்கு பெருவிருந்தாக அமையும்.

அவ்வகையில், இச் சிலைகள் கிடைத்த இடங்களாக எடுத்துக்காட்டப்படுவனவற்றுள் அநுராதபுரம், பொலநறுவை, திருகோணமலை, பதவியா என்பன மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தனவாக விளங்குகின்றன. காலத்தால் முந்தியதும், தென்னிந்திய சிற்பமரபின் நேரடியான அலைகளை உள்வாங்கிக் கொண்டு வளர்ச்சியடைந்த கலைமரபுக்குரிய அம்சங்கள் வெளிப்படுத்தப்பட்ட இடமுமாக அநுராதபுரம் விளங்கியதைக் காணலாம்.[3] தனித்துவமாக பார்வதி கோயில்கள் கட்டப் பெற்று வழிபாடு இயற்றப்பட்ட ஒரு தலமுமாக அநுராதபுரம் விளங்கியது என்பதும் இங்கு நோக்கத்தக்கது.[4]

**'......... அநுராதபுரத்தில் கிடைத்துள்ள இந்தத் தொல்பொருளா தாரங்கள் சென்ற நூற்றாண்டின் இறுதி யில் H.C.P. Bell என்ற ஆராய்ச்சியா ளரால் வெளிக்கொணரப் பட்டவையாகும். 1892 இலும் 1893 இலும் அவர் அங்கு அகழ்வாராய்ச்சி நடாத்திய போது பல சைவக் கோயில்களின் அழிபாடுகளும் ஒரு சில தமிழ்க் கல்வெட்டுகளும் அநுராத புரத்தின் வடக்குப் புறத்தில் கண்டுபிடிக்கப் பட்டன. பெண் தெய்வ வழிபாட்டுக்குரிய கோயில்களும் காணப்பட்டன. இக்கோயில் கள் அனைத்தும் ஒரே வடிவினதாய் எளி மையான முறையில் பல்லவர்காலக் கோயில்களைப் போன்று அடித்தளங் களைக் கொண்டிருந்தன. இவற்றுக்கு குமாரகணம் என்ற நிர்வாகக் குழுவினர் பொறுப்பாக இருந்தமையை நோக்குமி டத்து, தமிழ்நாட்டிற் போலவே இலங்கை யிலும் சைவக் கோயில்களின் நிர்வாகம் அமைக்கப்பட்டிருந்தது என ஊகிக்க இட முண்டு''[5]**

அநுராதபுரத்திலிருந்து இதுவரையில் ஐந்துக்கு மேற்பட்ட பார்வதி வெண்கலச் சிற்பங்கள் வெளிக்கொணரப்பட்டுள்ளன. இவற்றுள் காலத்தால் முந்திய பார்வதி சிற்பம் கி.பி 9ம் நூற்றாண்டுக்கு முற்பட்டதாக எடுத்துக்காட்டப்படுவது குறிப்பிடத்தக்கதாகும்.

மிக அண்மையிலே நிற்கும் நிலையில் அமைந்த நான்கு பார்வதி வெண்கலச் சிலைகள் அனுராதபுரத்திலுள்ள அபயகிரி விஹாரத்துக் கண்மையிலிருந்து அகழ்ந்தெடுக்கப்பட்டன. இவற்றுள் ஒன்றின் பீடத்திலே 'நானாதேசி' எனத் தமிழிலே பொறிப்பு ஒன்று காணப்படு வதிலிருந்து வணிக கணங்களுக்கும் பார்வதி வழிபாட்டுக்குமிடையே இருந்திருக்கக் கூடிய நெருக்கமான உறவினை அறிந்து கொள்ளலாம்.[6]

மிகக் கூடுதலான எண்ணிக்கையைக் கொண்ட பார்வதி வெண்கலச் சிலைகள் பொலனறுவையிலிருந்தே வெளிக்கொணரப் பட்டன. புலத்தி நகரம் அல்லது ஜனநாத மங்கலம் என அழைக்கப்பட்ட இப்பொலன றுவையிலிருந்து (இதுவரையில்) 10 பார்வதி வெண்கலச் சிற்பங்கள் வெளிக்கொ ணரப்பட்டுள்ளன. பொலனறுவையின் வரலாறானது சோழப் படையெடுப்பாளர்களது நடவடிக்கைகளுடன் அந்நடவடிக்கையின் மையமாக ஏறத்தாழ அரை நூற்றாண்டுக்கு மேல் தொடர்புபட்டிருந்தது. அக்காலகட்டத்திலே 13 இந்துக் கோயில்கள் ஒரு காளிகோயில் உட்பட கட்டி முடிக்கப்பட்டன. 'வானவன் மாதேவி ஈசுரமுடையார்' என அழைக்கப்பட்ட 2ம் சிவ தேவாலயம் அவை எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்தாற்போல் இயங்கியது.[7] கடந்த நூற்றாண்டின் இறுதியிலே இங்கு ஆரம்பிக்கப்பட்ட தொல்லியல் அகழ்வாய்வு களின் விளைவாக ஐந்து சிவதேவாலயங்களும், ஏழு விஷ்ணு தேவாலயங்களும் இருக்க அடையாளம் காணப்பட்டன. இத்தேவாலயத் திலிருந்து மீட்டு எடுக்கப்பட்ட பார்வதியின் உலோகச் சிலைகளுள் பெரும்பாலானவை, தகெகீழாக பாதுகாப்பு நோக்கத்தின் பொருட்டு நடு மண்டபங்கட்குள்ளும், கோயிற் சுவர்களுக் குள்ளும், தாழிகளுக்குள்ளும் புதைந்திருக்கவும் மறைக்கப்பட்டும் காணப்பட்டன.[8] பொலன றுவையிலிருந்து வெளிப்படுத்தப்பட்ட பார்வதியின் உலோகச் சிலைகள் யாவும் கொழும்பிலுள்ள அரும்பொருளகத்திலே பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன.

பார்வதி வெண்கலச் சிற்ப மரபு தொடர்பான பிறிதொரு வளர்ச்சி நிலையினைத் திருகோணமலையிலிருந்து கிடைத்துள்ள மூன்று சிலைகளிலிருந்து அறிய முடிகிறது.[9] அவற்றுள் ஒன்று இன்று வரை தம்பலகாமம் கோணேஸ்வரர் ஆலயத்தில் வழிபாட்டில் இருந்து வருவதனைக் காணலாம். ஏனைய இரண்டு வெண்கலச் சிலைகளும் கொழும்பு அரும் பொருளகத்திலே பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளமையைக் காணலாம். இலங்கையில் கிடைத்த பார்வதி வெண்கலச் சிற்பங்களுள் எல்லாவற்றுக்கும் உரைகல் போன்று அமைந்தது திருகோணமலை தம்பலகாமம் கோணேஸ்வரர் கோயிலிலிருந்து வரும் பார்வதி சிலை எனலாம்.[10]

பதவியாவிலிருந்தும் பார்வதி வெண் கலச் சிலைகள் பல கிடைத்திருந்தும், அவை சரியான முறையில் அடையாளம் காணப்படாத நிலையில் பெற்றுக்கொள்ளப்பட்ட இடத்தின் பெயர் பதிவுசெய்யப்படாத ஒரு நிலையிலும் பல அரும்பொருளகங்களின் கைமாற்றங்களி னூடாக கொழும்பு அரும் பொருளகத்தினை அவை சென்றடைந்ததன் காரணமாகவும் லக்ஷ்மி அல்லது கௌரி என்ற பெயரில் கண்டெடுக்கப்பட்ட இடத்தின் பெயரின்றி காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளமையைக் காணலாம். பதவியா ஸ்ரீபதி எனவும், பார்வதி எனவும் ஸ்ரீபதிக்கிராமம் எனவும் அழைக்கப் பட்டது. பார்வதியின் பெயரில் சத்திரங்கள் பல அங்கு இருந்தமைக்கும் சான்றுகள் உண்டு.[11] இந்நிலையில் பார்வதியின் வழிபாடு அங்கு

பிரபல்யம் அடைந்திருக்கும் என்பதில் சந்தேகமிருக்காது.

**பார்வதி சிலைகளின் பொது இயல்புகள்**

இலங்கையில் இதுவரையில் கிடைத்துள்ள 20 பார்வதி வெண்கலச் சிலைகளுள்ளே 18 சிலைகள் நிற்கின்ற நிலையில் அமைந்தனவாகவும், இரண்டு சிலைகள் மாத்திரம் இருக்கின்ற நிலையில் அமைந்தனவாகவும் கிடைத்துள்ளன. இவற்றினுள்ளே இரண்டு சிலைகள் மாத்திரம் பீடங்களின்றிக் கிடைத்துள்ளன.

ஏனைய 18 பார்வதி வெண்கலச் சிலைகளும் தாமரையாசனத்துடன் கூடியன வாக மீட்கப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. இதுவரைக்கும் இலங்கையிற் கிடைத்த வெண்கல இந்து உலோகச் சிலைகள் பற்றி ஆய்வு செய்த கலை வரலாற்று ஆசிரியர்களும் சரி, இந்து சமயத்தின் மீதான ஈடுபாட்டின் காரணமாக அச்சிலைகளைப் பற்றி விளக்கம் கொடுத்த அறிஞர்களும் சரி, நடராசர் சிலைகளைப் பற்றியே பெருமளவிற்கு ஆய்வு செய்ததும் அவற்றுக்கு வகுப்பெண்கொடுத்து அவற்றைப் பற்றி சமய – தத்துவ ரீதியில் விளக்கம் கொடுப்பதுமாக இருந்துள்ளனரே தவிர பார்வதி வெண்கலச் சிலைகளைப் பற்றி அந்தளவுக்கு சிந்தித்திருந்தனர் எனக் கூறமுடியாதுள்ளது. இக்காரணத்தினாலும் காலத்துக்குக் காலம் கிடைத்துவரும் எண்ணிக்கையில் அவை அதிகரித்துவரும் காரணத்தினாலும் அச்சிலைகளைப்பற்றி விளக்கும் போது, அவை கொழும்பிலுள்ள அரும்பொருளகப் பதிவேட்டில் பதிவு செய்ததன் பிரகாரம் அவற்றுக்கு இலக்கமிட்டு விளக்கமளிக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. இச்சிறு கட்டுரையின் கண் அதே பண்பு பின்பற்றப்பட்டு தனித்தனியான முறையிலே மிகச்சுருக்கமாக அவை ஒவ்வொன்றையும் பற்றி விபரிக்கப்பட்டுள்ளமையினைக் காணலாம்.

**பார்வதி சிலை இல : 1**
**(CMR No.13.104.286)**

தாமரை மலர் ஆசனத்தின்மேல் நிற்கும் நிலையில் அமைக்கப்பட்ட இச்சிலையானது 51.2 சென்ரிமீற்றர்கள் உயரத்தினைக் கொண்டுள்ளது. தலையில் கரண்ட மகுடத்துடன் கூடிய இச்சிலையின் கழுத்தில் கடிசூத்திரம் உட்பட ஆபரணங்களைக் கொண்டதாகவும் காணப்படுகிறது. வலது கரமான நீலத்தாமரை மொட்டொன்றினைத் தாங்கி நிற்க இடது கரம் கடஹஸ்த நிலையில் கீழே தொங்கியுள்ள நிலையில் காட்டப்பட்டுள்ளது. மேகலையுடன் கூடிய இடையலங்கார ஆபரணங்களுடன் இணைக்கப்பட்டுள்ள ஆடையமைப்பானது கீழே கணுக்கால் வரைக்கும் காட்டப்பட்டுள்ளது. இச்சிலையின் சிற்ப அமைதியை நன்கு அவதானித்த இந்திய சிற்பக்கலை வல்லுனரான கங்கூலி என்பவர் இரண்டு மிகமுக்கியமான முரண்பாடான அம்சங்களை எடுத்துக் காட்டியுள்ளார்[1]. ஒன்று 'திரிபங்க நிலை' எனப்படும் அசைவு நிலை வலப்பக்கமாக வலது பாதமும், வலது இடையும் வளைத்த நிலையில் எடுத்துக் காட்டப்பட்டிருப்பது. இரண்டு வலது கையில் தாமரை மொட்டினைத் தாங்கியுள்ள நிலையானது வலது மார்பகத்துக்கு மேலே உயர்ந்திருப்பது என்பவையாகும். இது சிற்ப சாஸ்திர மரபுகளில் விதிக்கப்பட்ட முறைகளில் இருந்து முற்றிலும் முரண்பட்ட ஒரு தன்மையை எடுத்துக்காட்டுவதாகும். பொதுவாகக் குறிப்பிடுவதாயின் இச்சிற்பத்தின் வெளிப் பாடானது இலங்கைக்கேயுரிய பௌத்த உலோக சிற்பக் கலையில் கைதேர்ந்த ஒரு சிற்பியின் கைவண்ணத்தில் பார்வதியின் உருவை வெளிப்படுத்த முயற்சி செய்தமையின்

விளைவேயாகும். இப்பார்வதி சிலையின் தலையில் காணப்படும் முடியின் அமைப்பு பௌத்த பாரம்பரியத்தினைத் தெளிவாகப் படம்பிடித்துத் தருகிறது. கலாயோகி ஆனந்தகுமாரசுவாமி அவர்கள் இச்சிலையின் காலத்தினை கி.பி 10ம், 13ம் நூற்றாண்டுகட்கு சேர்ந்தது எனக் குறிப்பிட்டுள்ளார்.[12]

**பார்வதி சிலை இல .2**
**(CMR No.13.108.287)**

மிகவும் அழகிய தாமரையாசனத்திலே நிற்கின்ற நிலையில் வடிக்கப்பட்ட இச்சிற்பமானது 63.6 சென்ரி மீற்றர்கள் உயரத்தினைக் கொண்டுள்ளது. பொலனறுவையில் 3ம் சிவதேவாலயத்திலிருந்து அகழ்ந்து வெளிப்படுத்தப்பட்ட இச்சிலை பல்வேறு சிறப்பியல்புகளைக் கொண்டு விளங்கு வதனைக் காணலாம். தலையில் கிரீட மகுடம், காதுகளில் மகர குண்டலங்கள், வலது கரத்தில் தாமரை மலர், இடது கரம் கடகஸ்த நிலை கைக்கட்டுகளில் (Arm Lets) மகர வடிவ ஆபரணங்கள் என்பன பிரதான அலங்கார அணிகலன்களாக உள்ளன.

இச்சிலையின் அமைப்பினையும் சிற்பசாஸ்திர முறைகளுக்கேற்ற வகையில் அமைந்த தன்மையினையும் அவதானித்த அருணாசலம் அவர்கள் அதனைச் சிவகாமியாக அடையாளம் கண்டுள்ளார்.[13] 'மங்கள சூத்திர மற்ற நிலையில் இவர் இச்சிலையை பொலனறுவையிலே கண்டெடுக்கப்பட்ட சிவன் இலக்கம் 8 இனது சக்தியாக அடையாளம் கண்டுள்ளார். இருப்பினும் , இவ்விரு உலோக சிற்பங்களது விரலக்ர'வை அவதானிக்கும் போது இவை இரண்டுக்குமிடையே இருக்கின்ற பாரிய வேறுபாடு தெளிவாகின்றது. கலாயோகி ஆனந்த குமாரசுவாமி அவர்கள் இச்சிலையின் காலத்தினை கி.பி 10ம், 13ம் நூற்றாண்டுகட்கு இடைப்பட்டது எனக் குறிப்பிட்டுள்ளார்.[14]

**பார்வதி சிலை 3**
(CMR.13.109.287)

திட்டவட்டமாக சோழ மரபினைச் சேர்ந்தது எனக் கொள்ளப்படும் இப்பார்வதி சிலையானது பொலனறுவையில் உள்ள 5ம் சிவதேவாலயத்திலிருந்து பெற்றுக்கொள்ள ப்பட்டதாகும். தாமரையாசனத்தின் மீது நிற்கின்ற நிலையில் அமைந்த இச்சிலை யானது 83.34 சென்ரிமீற்றர்கள் உயரத்தினைக் கொண்டதாகும். அலங்கார அம்சங்கள் பொறுத்து ஒரு புதிய பரிமாணத்தினைக் காட்டும் இச்சிலையானது பார்வதியின் உலோக கலைமரபுகளிலிருந்து வேறுபட்ட ஒரு தன்மையைக் காட்டி நிற்கின்றது. இலங்கைக் கேயுரிய தனித்துவமான சோழர் பாணியிலான உலோக வார்ப்புக் கலைக்கு இது ஒரு வேளையில் சான்றாக அமையலாம்.[15]

நீண்ட சதுரமான முகவெட்டினையுடைய இச்சிலையின் தலையில் அழகிய நீண்ட கரண்ட மகுடமானது ஐந்து சுற்றுக்களைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. அக்கரண்ட மகுடத்தின் மையத்தில் குவிந்த வச்சிர வடிவம் புடைத்த நிலையில் காணப்படுவது பார்வதியின் முகவெட்டினை ஒளியூட்டச் செய்கின்றது. இது மாத்திரமன்றி இச்சிலையின் கழுத்திலே அணியப்பெற்றுள்ள மிகத் தடிப்பான கழுத்தாபர ணங்களும், பதக்கங்களும் திட்டவட்டமான வட்ட வடிவிலே அமைக்கப்பெற்றுள்ளது என்பது பார்வதியின் கன்னிமைத் தன்மையை – இளமைக்கு மெருகூட்டும் தன்மையைக் காட்டுவதாக உள்ளது. துரதிஷ்ட வசமாக வலது கர மானது உடைந்த நிலையில் காணப்பட, இடது கரமானது கடகஸ்த நிலையில்

தோற்றமளிக்கின்றது. இடது தோட்பட்டையூடாகச் செல்லும் முப்புரி நூல் (ஜக்நோபம்) செழிப்பினை வெளிப்படுத்தும் தொப்பூழ் மேலாக வலது பக்கமாகக் காட்டப்பட்டுள்து. மேகலையுடன் கூடிய இடையாபரணங்களும் ஆடையின் அமைப்பும் பரதநாட்டிய நிலையிலுள்ள சாயலை வெளிப்படுத்துவதாக உள்ளது. கலாயோகி ஆனந்தக்குமாரசுவாமி அவர்கள் இச்சிலையினை கி.பி 10ம், 13ம் நூற்றாண்டுக்கிடைப்பட்டதெனக் குறிப்பிட்டுள்ளார்.[16]

**பார்வதி சிலை இல . 4**
(CMR No. 13. 110.287)

இப் பார்வதி சிலையானது முன்னைய சிலையுடன் வேறுபட்டு அமையாத போதிலும், ஒரு சில அம்சங்களையிட்டு தனித்துவமான தன்மையைக் கொண்டுள்ளது எனலாம். தாமரை மலர்பீடத்தின் மீது நிற்கின்ற நிலையில் அமைந்த இச்சிலை 84.2 சென்ரி மீற்றர்கள் உயரத்தினைக் கொண்டிருந்த போதிலும், தலையில் உள்ள கரண்ட மகுடத்தின் அமைப்புமிகவும் சிறியதாகவும் காணப்படுகின்றது. இதேநேரத்தில் இச்சிலையின் வெளித்தோற்ற இயல்பினைப் பொறுத்த வரையில் ஒருவிதமான bold தன்மை வெளிப்படுத்தப்படுவதனையும் அதன் அடிப்படையில் அச்சிலையின் உயரம் கூட மட்டுப்படுத்தப்படுவதனையும் அவதானிக் கலாம். (இதுவே திரிபங்க நிலையின் இயல்புமாகும்). கலாயோகி ஆனந்த குமாரசாமி அவர்கள் இதனை கி.பி. 10ம், 13ம் நூற்றாண்டுகட்கு இடைப்பட்டதாகக் குறிப்பிட்ட போதிலும், இச்சிலையின் தடித்த உதடுகளை மையப்படுத்திப் பார்க்கும் போது இது கி.பி. 10ம் நூற்றாண்டுக்கும் முற்பட்டதாகலாம் என ஊகிக்க இடமுண்டு.[17]

**பார்வதி சிலை - 5**
(CMR No. 13. 111 A. 288)

பொலநறுவையிலிருந்து வெளிப்படுத்தப்பட்ட இச்சிலையானது தாமரையாசனத்தில் நிற்கின்ற நிலையில் 62.6 சென்ரிமீற்றர்கள் உயரத்தினைக் கொண்டுள்ளது. பெருமளவிலான அம்சங்களில் இதற்கு முன்னைய சிலையுடன் ஒத்திருந்த போதிலும், குறிப்பிட்ட சில அம்சங்களைப் பொறுத்த மட்டில் தனித்துவம் வாய்ந்ததாகவுள்ளமை குறிப்பிடத் தக்கது. அருணாசலம் அவர்கள் அவதானித் தமையின் அடிப்படையில், மார்புப் பதக்கம், காற்பெரு விரல்களில் உள்ள வளையங்கள் (மெட்டி) என்பனவும், இடதுபக்க தோள்பட்டையூடாகப் அணிந்துள்ள ஜக்ஞோபத்துடன் (முப்புரிநூல்) ' மங்கள சூத்திரம்' எனப்படும் பெண்களுக்கான மங்கலத்தாலியும் காணப்படுவதிலிருந்து இச்சிலையை சிவகாமி என அடையாளம் காணலாம்.[18] கலாயோகி ஆனந்த குமாரசாமி அவர்கள் இச்சிலையை கி.பி. 10ம் 13ம் நூற்றாண்டுகட்கு இடைப்பட்டது எனக் குறிப்பிட்டுள்ளார்.[19]

**பார்வதி சிலை இல.6.**
(CMR No. 13. III B. 288)

தாமரையாசனத்தில் நிற்கின்ற நிலையில் அமைந்த இப்பார்வதி சிலையானது பொலநறுவையிலுள்ள முதலாம் சிவதேவாலயத்தினுள் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்டதாகும். (முதலாம் சிவதேவாலயத்தின் கட்டிடக் கலைப் பண்புகள் பாண்டியர் பாணிக்குரியவையாகும்). 78.7 சென்ரிமீற்றர்கள் உயரத்தினையுடைய இச்சிலையானது பார்வதி சிலைகள் இலக்கம் 2, 5 ஆகியனவற்றிலிருந்து வேறுபட்ட கலையம்சங்களைக் கொண்டு காணப்படுகின்றது. காதணிகள், தாமரை மலர்ப்பீடம் என்பவற்றைப் பொறுத்து தனித்துவத்தையும் காணமுடிகிறது. கலாயோகி ஆனந்தகுமாரசாமி அவர்கள்

இச்சிலையினை கி.பி. 10ம், 13ம் நூற்றாண்டுகட்கு இடைப்பட்டது எனக் குறிப்பிட்டுள்ளார்.[20]

### பார்வதி சிலை இலக்கம் - 7
(CMR No. 13. 206. 299)

பொலனறுவையில் கண்டுபிடிக்கப்பட்ட பார்வதி சிலைகளுள் மிகச் சிறியதும், சமபங்க நிலையில் நிற்கின்ற ஒரு வடிவமுமே இச்சிலையாகும். இந்திய இலட்சியப் பெண்மையின் தோற்றத்தினைத் தன்னளவிலே வெளிப்படுத்தி நிற்கும் இப்பார்வதி சிலையின் இடப்பாகத்தின் அமைப்பானது விரிவான அழகியல் நோக்கிலமைந்த ஆய்வுக்குரியதாகும். 31 சென்றி மீற்றர்கள் உயரத்தினைக் கொண்ட இச்சிலையின் ஆபரண ஒழுங்கு முறைகளும், ஆடையின் அமைப்புக்களும், வேறுபட்ட ஒரு கலைமரபின் வெளிப்பாட்டினை, அதன் வளர்ச்சியை எடுத்துக்காட்டுவதாகவுள்ளது. கலாயோகி ஆனந்தகுமாரசுவாமி அவர்கள் இச்சிலையினை கி.பி.10ம், 13ம் நூற்றாண்டு கட்கு இடைப்பட்டது எனக் குறிப்பிட்டுள்ளமை இங்கு மீளாய்வுக்குரியதாகும்.[21]

### பார்வதி சிலை இலக்கம் - 8
(CMR No. 13.296. 285)

மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு கலை மரபில் உருவாக்கப்பட்டு இருக்கும் நிலையில் வெளிப்படுத்தப்பட்ட இப்பார்வதி சிற்பமானது 41 சென்றிமீற்றர்கள் உயரத்தினை உடையதாக (தாமரை) ஆசனத்தினை இழந்த நிலையில் பொலநறுவையிலிருந்து மீட்டெடுக்கப்பட்டது. இச்சிலையிலும், பார்வதி சிலை இலக்கம் 1 இனது குணவியல்புகளைப் போன்றே பல தனித்துவமான தன்மைகளைக் காண முடிகின்றது. சுகாசன நிலையில் அமைக்கப்பட்ட இப்பார்வதியின் இடது பாதம் கீழ் நோக்கியவாறு தொங்கிக்கொண்டும் வலது பாதம் மடிந்த நிலையிலும், வலது கரத்தில் தாமரை மொட்டொன்றினைக் கொண்டும், இடதுகரம் வரதஹஸ்த நிலையிலும் சித்தரிக்கப்பட்டுள்ளது. தாமரை மொட்டினைத் தாங்கி நிற்கின்ற வலது கரம் பக்க முலைக்காம்புக்கு மேல் உயர்த்தி விடப்பட்ட நிலையானது சிற்ப – சாஸ்திர மரபுகளுடன் முரண்பட்டுக் கொள்வதாக உள்ளது. இதனை அவதானித்த இந்திய சிற்பவியல் ஆய்வாளர் கங்கூலி என்பவர் குறிப்பிடுவதாவது, "ஓரளவுக்கொத்த இன்னொரு பார்வதி சிலையுடன் இச்சிலையை ஒப்பிட்டு நோக்குவோமேயானால், அவற்றின் உருவ அமைதிக்கும், மெருகூட்டலுக்கும் ஆடையாபரணங்களது வரைவுகளுக்குமிடையே காணப்படும் பாரிய வேறுபாடு என்பன எல்லாவற்றையும் கொண்ட இலங்கையின் உதாரணங்களானவை தென்னிந்திய விதி முறைகளுக்கு அவ்வுலோகச் சிற்பியானவன் வழிப்படுத்தப்பட்டவன் அல்லன் என்பதைத் தெளிவாக்குகின்றன." எனக் குறிப்பிட்டுள்ளார்.[22]

பௌத்த கலை மரபின் பிரதான அம்சங்களைக் கொண்டிருக்கும் இச்சிலையின் சிரசிலே சிங்களப் பாணியில் அமையப்பெற்ற முடி (Cornical) ஒன்றும், காதுகளில் அமைந்துள்ள ஆபரணங்கள் இரண்டும், கழுத்திலே அணியப்பெற்ற மாலைகள் மூன்றுமாக இணைந்து இப்பார்வதி சிலையின் தனித்துவமான பிறப்பினை சுதேசக் கலை மரபுக்குரியதாக்கியுள்ளது. கலாயோகி ஆனந்த குமாரசாமி அவர்கள் இச்சிலையினை கி.பி. 10ம், 13ம் நூற்றாண்டுகட்கு இடைப்பட்டது எனக் குறிப்பிட்டுள்ளார். ஒருவேளை இச்சிலையானது கி.பி.13ம் நூற்றாண்டுக்குப் பிற்பட்டதாகவும் அமையலாம்.[23]

## பார்வதி சிலை இல. 9
(CMR No. 13.213.299)

அனுராதபுரத்திலுள்ள சங்கிலி கணாதரவாவி என்ற இடத்தில் கண்டு பிடிக்கப்பட்ட நிற்கும் நிலையில் அமைந்த பார்வதி சிலையானது 9.4 சென்ரி மீற்றர்கள் உயரமுடையதாகும். வலது கரம் உடைந்த நிலையில், தாமரையாசனம் எதுவுமின்றிக் கிடைத்த இச்சிலையை சரியான முறையில் கலாயோகி ஆனந்தகுமாரசாமி அவர்களால் அடையாளம் கண்டுகொள்ள முடியாத போதிலும் அது பாவனையிலிருந்து விலக்கப்பட்ட ஒரு சிலை என்ற கருத்தில் குறிப்பிடப்பட்டுள்ளார். இது விசேடப்பட்ட அல்லது பாவனையிலிருந்து விலக்கி வைக்கப்பட்ட நிலையிலேயே சங்கிலி கணாதரவாவியில் கண்டெடுக்கப்பட்டது என்பது அவரது குறிப்பாகும். இதனை வலியுறுத்துவதற்காக 'மகாநிர்வாணதந்திர' என்ற நூலின் 11ம் அத்தியாயத்தில் 100வது சுலோகத்தை பின்வருமாறு எடுத்துக்காட்டு கின்றார். "கால்கள் இல்லாத ஒரு கடவுளருடைய உருவம் அல்லது அதில் உடைவு காணப்பட்டால் அல்லது அவ்வுருவத்தில் துவாரங்கள் காணப்பட்டால் (அதனை) நீருக்குணவாகச் செய்ய வேண்டும். (நீர் நிலைகளில் இதனை இடவேண்டும் என்பதாகும்) எது எவ்வாறெனினும், வலது கரம் இல்லாத இச்சிலையின் அமைதியினைப் பொறுத்த மட்டில் அதன் காலம் கி.பி. 10ம் நூற்றாண்டு களுக்குரியதாக கலாயோகி ஆனந்தகுமார சுவாமி குறிப்பிட்டிருப்பினும், உண்மையில் அதன் காலம் கி.பி.9ம் நூற்றாண்டுக்கும் முற்பட்ட தாகவே கொள்ள வேண்டும்.[24]

## பார்வதி சிலை - இல. 10
(Find No. 1960/ 05)

இலங்கையிலே இதுவரையில் அகழ்ந்து வெளிக்கொணரப்பட்ட பார்வதி சிலைகளுள் இச்சிலையே மிகவும் உயரமானதாகக் கிடைத்துள்ளது. 1960ல் பொலநறுவையில் 5ம் சிவதேவாலயத்தின் சுவர்ப்பகுதி மீண்டும் அகழ்வாய்வுக்கு உட்பட்டபோது 93.5 சென்ரிமீற்றர் உயரமான இச்சிலை கிடைக்கப்பெற்றது. இச்சிலை மிகவும் எடுப்பான ஒரு தோற்றத்தினை அதனைப் பார்த்த மாத்திரத் திலே தருகின்றது எனலாம். மிகவும் திருத்தமான – இந்து சிற்ப சாஸ்திரங்கள் நன்கு கைவந்த – பௌத்த உலோக வார்ப்புக்கலை மரபில் உருவான பார்வதியாகவே இச்சிலை காணப்படுகிறது. கூம்பு வடிவான மகுடத்தி னைத் தலையிற் கொண்டு, தாமரையாசனத்தின் மீது நிற்கும் நிலையில் அமைந்த இச்சிலையின் ஆபரண ஒழுங்குகளும், ஆடை நேர்த்தியான தன்மையை வெளிப்படுத்துவதாக அமைகின் றது. கழுத்திலே மிகவும் தடிப்பான பதக்கம் வட்டவடிவிலே மிகத் துல்லியமாக அமைக்கப் பட்டுள்ளது. இடது தோள்ப்பட்டையூடாகச் செல்லும் ஜக்ஞோபத் துடன் மங்கள சூத்திரமும் இணைக்கப் பட்டிருப்பது என்பது இச்சிலையை சிவகாமியாகக் கொள்ள வைக்கின்றது. அவ்வடிப்படையில் கொடகும்புர என்பவர் பொலநறுவையிற் கிடைத்த நடராசர் இலக்கம் 6 இனது சத்தியாக இதனைக் கொள்கின்றார்.[25]

ஆடையமைப்பின் ஒழுங்கு, அதில் வெளிப்படுத்தப்பட்டுள்ள மடிப்புக்கள், வளையங்கள் என்பன கைதேர்ந்த தென்னிந்திய வார்ப்புக் கலையில் உருவான படிமத்தினை நினைவூட்டினாலும்கூட, தொடகும்புரவின் கருத்துப்படி இப்பார்வதி சிலையின் ஆடையலங்கார முறையின் குறிப்பிட்ட சில அம்சங்கள் பொலநறுவையில் உள்ள மகாபராக்கிரமபாகுவினதும், தாரா வெண்கலச் சிலையினதும் ஆடையமைப்பு முறையை ஞாபகப்படுத்துவதாக உள்ளது என்பதாகும். கொடகும்பு, இச்சிலையானது

கி.பி.11ம், 12ம் நூற்றாண்டுக்குரியது எனக் குறிப்பிட்டுள்ளார்.[26]

**பார்வதி சிலைகள் இலக்கம் 11 – 12**
(FIND No. 1950)

திருகோணமலையில் வடக்கு கடற்கரை வீதியில் தற்செயலாகக் கிடைத்த பெரும் கலைக்கருவூலங்களுள் இவ்விரு பார்வதி சிலைகளும் உள்ளடங்கியிருந்தன. இலங்கையின் இந்து விக்கிரஹவியல் வரலாற்றிற்கு திருகோணமலையில் கிடைத்த இப்படிமங்கள் மிகமிக முக்கியத்துவம் வாய்ந்தனவாக விளங்குகின்றன. இலங்கைக் கேயுரிய காலத்தால் முந்திய தனித்துவமான இந்து படிமக்கலை மரபொன்று திருகோணமலை மாவட்டத்தில் வளர்ச்சியடைந் தமைக்கு இவை சான்றாகின்றன. பார்வதி சிலை இலக்கம் 11 இருக்கின்ற நிலையிலும் 12 நிற்கின்ற நிலையிலும் அமைந்துள்ளன. இருக்கின்ற சிலையின் உயரம் 47.6 சென்ரிமீற்றர்கள் ஆகும். நிற்கின்ற சிலையின் உயரம் 50 சென்ரிமீற்றர்களாகும். வரத முத்திரையுடன் கூடிய இருக்கின்ற நிலையில் உள்ள பார்வதியின் வலது காத்திலே நீலோற்பல மலரொன்று காணப்படுகிறது. சுகாசன நிலையில் அமைந்த இச்சிலையில் வலது பாதத்தின் பெருவிரல், சாய்வாக கீழே தொங்கிக்கொண்டிருக்கும் இடது பாதத்தின் முழங்காலினை மெல்லத் தொட்டபடி காணப்படுவது அதன் பழமைத் தன்மையை எடுத்துக்காட்டுகின்றது எனலாம். இச் சிலையைப் பற்றி ஆய்வு செய்த பாலேந்திரா என்பவரினதும், இராகவன், கிருஷ்ணஐயர் என்போர்களது கருத்துப்படியும், இப்பார்வதி மூர்த்தமானது சோமஸ்கந்த மூர்த்தத்தின் இணையே என்பதாகும்.[27] சிற்ப–சாஸ்திர விதி முறைகளுக்கமைய சோமஸ்கந்த மூர்த்தத்தில் பார்வதியின் இடது காதணி "மயிற்சிறகினை"க் கொண்டதாக அமைந்திருக்க வேண்டும். ஆனால் இப்பார்வதி மூர்த்தமானது இற்றைவரையில் வழிபாட்டுப் பொருளாய் இருந்து வருகின்றமை காரணமாக அவ்விசேட இயல்புகளைக் கண்டறிந்து கொள்ள முடியாதிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

நிற்கின்ற நிலையில் அமைந்த பார்வதி சிலையின் சிறப்பியல்புகள் பல இந்திய சிற்பக்கலை ஆய்வாளர்களை மட்டுமன்றி, ஐரோப்பியக்கலை விற்பன்னர்களையுமே ஈர்த்துள்ளமை இங்கு கவனிக்கத்தக்கது. இச்சிலையில் விசேட அம்சம் என்னவெனில் திருவாசி அல்லது பிரபாமண்டலத்தினுள் தாமரையாசனத்தின் மீது உருவாக்கப்பட்ட ஒரேயொரு வடிவம் இது என்பதாகும். துரதிஷ்டவசமாக அத்திருவாசியின் மேற்பாகம் எமக்குக் கிடைக்காமற் போயிற்று. மீனாட்சி என்று வர்ணிக்குமளவிற்கு எடுத்த எடுப்பிலே ஒரு மீனைப்போன்ற தோற்றத்திலே உண்மையான திரிபங்க நிலையிலே, இந்தியப் பெண்மையின் இலட்சிய பிம்பம் பிரதிபலிக்கும் படி வடிக்கப்பட்ட இப்படிமம் H.Zimmer என்ற மேலைத்தேய கலைப்புலவரை ஒருங்கே ஈர்த்துள்ளது. அவருடைய வர்ணனையில் இங்கு குறிப்பிடுவதாயின் "It is moment of Romance" என்பதாகும். கிருஷ்ணஐயர் என்பவரது கருத்தின்படி இப்படிமமானது கி.பி. 11ஆம் நூற்றாண்டுக்குரியது என்பதாகும்.[28]

**பார்வதி சிலை இலக்கம் 13**
(CMR. No. 13.214.299)

தாமரைப்பீடத்தின் மீது நிற்கும் நிலையில் அமைந்த இப்படிமமானது 16 சென்ரிமீற்றர்கள் உயரத்தினையுடையதாக வுள்ளது. திருகோணமலையிலிருந்து பெறப்பட்ட இப்படிமம் கலாயோகி ஆனந்தகுமாரசாமி

அவர்களால் "சக்தி" அல்லது "லக்ஷ்மி" என அடையாளம் காணப்பட்டுள்ளது.[29] ஆனால் இப்படிமத்தின் சிறப்பியல்புகள் பல அதனைப் பார்வதியுடன் அடையாளம் காண்பதற்கு உதவுவதாகவுள்ளன. மார்புக்கவசம் அணிந்த நிலையில் இடது கரத்தினால் தாமரை மொட்டினைத் தாங்கி நிற்கும் நிலையும், வலது கரம் வலது பாதத்தின் முழங்கால் வரைக்கும் நீண்டிருப்பதும் சிறப்பியல்புகளாக அமைந் துள்ளன. மேகலாபரணங்களுடன் இணையப் பெற்ற ஆடையமைப்பானது பெருமளவுக்கு பார்வதி சிலை 12ஐ நினைவுபடுத்துவதாக வுள்ளமை குறிப்பிடத்தக்கது. கலாயோகி ஆனந்தகுமாரசுவாமி அவர்கள் இப்படிமத்தின் காலத்தினை சந்தேகத்தோடு கி.பி. 13ஆம் நூற்றாண்டு எனக் குறிப்பிட்டுள்ளபோதும் அதற்கும் முற்பட்ட காலத்தைச் சேர்ந்தது எனக் கொள்ளமுடிகிறது.[30]

## கலாசார முக்கோணத் திட்டத்தின்கீழ் பார்வதி சிலைகள்

அனுராதபுரம், பொலனறுவை, கண்டி ஆகிய மூன்று முக்கியமான புராதன நகரங்களை இணைக்கும் முக்கோண வலயத்தினுள்ளே கலாசார அமைச்சினால் மேற்கொள்ளப்படும் தொல்லியல் அகழ்வாய்வுகளின் போதும் கிடைத்த கலைக் கருவூலங்களுள் ஏழுக்கு மேற்பட்ட எண்ணிக்கையுடைய பார்வதி வெண்கலச் சிலைகளும் உள்ளடங்கும். இவற்றில் ஒன்றிலே தான் "நானாதேசி" என்ற பெயர் பொறிக்கப்பட்ட படிமமும் காணப் படுகின்றது. கலாசார முக்கோண வலயத்தி னுள்ளே கிடைக்கப்பெற்ற இப்பார்வதி வெண்கலச் சிற்பங்கள் யாவும் நிற்கின்ற நிலையிலே அமையப்பெற்றனவாகும். வேறு பட்ட உயரவித்தியாசங்களில் கிடைக்கப் பெற்ற இப்படிமங்கள் யாவும் விஞ்ஞான முறையிலமைந்த பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப் பட்டுள்ளமை (Conservation) காரணமாக அவற்றைப் பற்றிய மேலதிக விபரங்களை தற்போது பெற்றுக்கொள்வதில் சிறிது கஷ்ட நிலைமையுள்ளது. எதிர்காலத்தில் இச்சிலைகள் பற்றிய விசேட அம்சங்கள் சைவசமய வரலாற்றிற்கு மேலதிக விபரங்களைத் தருவதாக அமையலாம்.

## முடிவுரை

மேலே கொடுக்கப்பட்டுள்ள இச்சிறு ஆய்வில் – மத்தியகால இலங்கையில் கண்டுபிடிக்கப்பெற்ற பார்வதி வெண்கலச் சிலைகள் தொடர்பான சில அம்சங்களை அறிமுகமாகக் கொடுக்க முடிந்துள்ளது. மேலும் விக்கிரஹவியல் ரீதியாக இச்சிலைகளைத் தமிழ்நாட்டிற் கிடைத்திருக்கக்கூடிய படிமங் களுடன் ஒப்பிட்டு நோக்கி,வேறுபடுத்தி ஆராயும் போதுதான் இலங்கைக்கேயுரிய தனித்துவமான இயல்புகளையும், இலங்கையில் தோற்றம் பெற்று வளர்ச்சியடைந்திருந்த பல்வேறு சிற்பக்கலை மரபுகளையும் இனங்கண்டு அவற்றைப்பற்றி விளக்கமளிக்க முடியும்.

இலங்கையில் கிடைத்த பார்வதி வெண்கலப் படிமங்கள் (பொலநறுவையிலிருந்து கிடைத்தவை)



## அடிக்குறிப்புக்கள்

1. கிருஷ்ணராசா. செ; இலங்கை இந்து வெண்கலச் சிற்பக் கலைமரபினூடாக அறியப்படும் ஆபரணக் கலைமரபு கைலாசநாதம், Professor Emeritus Late K.Kailasanatha Kurukkal Commemoration volume, pp. 361 - 371., 2000.
2. மேற்படி; பக். 362.
3. " இசுறுமுனிய விகாரை "எனத் தற்போது அழைக்கப்படும் அனுராதபுரத்திலுள்ள பௌத்த மையம் தென்னிந்தியாவிலுள்ள மாமல்லபுர குகைக் கோயிற் சிற்பங்களையொத்த வகையில் அமைக்கப்பட்டுள்ளது. காஞ்சிப் பல்லவ வம்சச் செல்வாக்கினை வெளிப்படுத்தி நிற்கின்ற 'இசுறுமுனிய' முன்பு 'முன்னேஸ்வரம்' என்றழைக்கப்பட்ட சிவன்கோவில் என்பது M.D. இராகவன் என்பவரது கருத்தாகும். பழம்பெரும் சிவாலயம் ஒன்றினது கோமுகி, ஆவுடையார் போன்றன இன்றும் இசுறுமுனிய விகாரையின் பிற்பக்கச் சுவரில் காணப்படுவதும், யானைச் சிற்பங்களை புடைப்பு முறையில் கொண்டுள்ள தாமரைத் தடாகமொன்றும் காணப்படுவது பல்லவ வம்சப் பண்பாட்டுச் செல்வாக்கினை அனுராதபுரம் நேரடியாக உள்வாங்கியிருந்தமையை உறுதிப்படுத்துகின்றது.
4. இந்திரபாலா, கா. ;'ஆதி இலங்கையில் இந்துமதம்,' வைரவிழா நினைவு நிலை – ஐயரத்தினம் உருவச் சிலை. திறப்புவிழா சிறப்புமலர், தெல்லிப்பளை, p.20; 1978
5. மேற்படி. ; பக். 20
6. கிருஷ்ணராசா. செ. ; பெருமாட்டி லீலாவதி இராமநாதன் நினைவுப் பேருரை; 'இலங்கையில் இந்து வெண்கலச் சிற்பங்கள் – உருவாக்கமும் உருவாக்கியவர்களும் பற்றிய ஓர் உசாவல் (கி.பி.9ம்– 10ம் நூற்றாண்டுகட்கு இடைப்பட்டவை)' 29 .03.2004 இல் கைலாசபதி கலையரங்கில் நிகழ்த்தப்பெற்ற உரையிலிருந்து. (பிரசுரிக்கப்படாதது)
7. மேற்படி.;முன்னர் குறிப்பிடப்பட்டது.
8. Bell H.C. P. ; Archaeological Survey of Ceylon, Annual Reports for 1906 - p.17; 1907 - p.17; 1909 - pp.3.7.
9. Balendra, W. ; Trincomalee Bronzes, Tamil Culture, vol. II. Ap. 1953. p.179.
10. பாலேந்திரா, W. ; திருகோணமலைத் திருவுருவங்கள் பக். 10 – 11 1953., பொழும்பு
11. Gangoly.R; South Indian Bronzes, pp. 65, 67.
12. Coomaraswamy, A.K.; Bronzes from Ceylon, chiefly from colombo Museum, p.14. 1914
    Arunachalam, P; Polonnaruwa Bronzes..., R.A.S.C.B, Vol. 68, p.218. 1915.
13. Coomaraswamy, A.K.; op. cited. p. 14.
14. மேற்குறிப்பிடப்பட்டது. p.14
15. மேற்குறிப்பிடப்பட்டது. p.14
16. மேற்குறிப்பிடப்பட்டது. p.14
17. Krishnarajah, S.; Saiva Bronzes in Srilanka A dissertation submitted to the Uni. of Mysore, India for M.A.Degree. p. 38., 1983

19. Comaraswamy, A.K. ; Bronzes from..., p. 14. 1914
20. மேற்குறிப்பிடப்பட்டது.
21. Krishnarayah, S. ;Saiva Bronzes from..., p. 39
22. Gangoly , op. cit., p. 67.
23. Krishnarajah, S. ;Saiva Bronzes from..., p. 40
24. மேற்படி. p. 40
25. Godakumbura, C.E.; 'Polonnaruwa Bronzes', Archaeological Commissioner's Administration Report - 1960. Colombo; Polonnaruwa Bronzes, Colombo, 1964. p.12
26. மேற்படி. ; p. 12.
27. Krishna Iyer, E; Newly found Trincomalee Incons', The Madras Hindu, 4th. Nov. 1951. p. 12
28. Zimmer, H. ; The Art of Indian Asia, p. 120.
29. Coomaraswamy, A.K.; Bronzes from Ceylon..., op. cit. pl.
30. கிருஷ்ணராசா, செ. ; பெருமாட்டி லீலாவதி இராமநாதன் நினைவுப் பேருரை, முன்னர் குறிப்பிடப்பட்டது.